**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம்,பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து சபை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக் ளுசை டுயமெய நுழிழசவ னுநளநடழிஅநவெ டீழயசன இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபை வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு

அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் படி,நிகழ்கால பெறுமதியின் வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடு செலுத்த வேண்டிய பணிக்கொடை ஏற்பாடு கணக்கிடும் போது காட்டப்பட வேண்டும்.அத்துடன் சபையானது அனைத்து இயல்பான இலாப மற்றும் நட்டங்களை முற்றடக்க வருமானத்தில் கருத்தில் கொள்ள வேண்டும்.ஆனால் மதிப்பாண்டில் சபையானது இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் படி பணிக்கொடை ஏற்பாட்டினை கணக்கிடவில்லை. | சபையானது 2021 ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் நேரத்தில், நிகழ்கால பெறுமதியின் வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடு செலுத்த வேண்டிய பணிக்கொடை ஏற்பாடு கணக்கிடும் போது நிபுணர்களின் ஆதரவை பெறும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் படி நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் படி, முற்றடக்க வருமானத்தின் இயல்பான இலாப மற்றும் நட்ட வித்தியாசங்களை நடைமுறை ஆண்டில் வேறு முற்றடக்க வருமானத்தில் கவனத்தில் கொள்ள வேண்டும்.ஆனால் சபை அதன்படி கருத்தில் கொள்ளவில்லை. | சபையானது 2021 ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் நேரத்தில், முற்றடக்க வருமானத்தின் இயல்பான இலாப மற்றும் நட்ட வித்தியாசங்களை கணக்கிடும் போது நிபுணர்களின் ஆதரவை பெற வேண்டும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் படி நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 31 திசெம்பர் 2020 இல் உள்ள வேறு கடன்பட்டோர் மீதியானது ரூபா 6,167,225 தொகையில் 5 வருடங்களுக்கு மேலாக உள்ள ரூபா 2,482,492 கடன்பட்டோர் மீதி உள்ளடக்கப்பட்டது.மீள பெறுவது நிச்சயமற்ற போதிலும், பெறுமதி இழப்புகள் மேற் கொள்ளப்படவில்லை. | ரூபா 50,702 பெறுமதியான வெளிநாட்டு பயண முற்பண கொடுப்பனவை பதிவழிக்க போதுமான மூல ஆவணம் இல்லாமையால் மற்றும் சோலா கிறீன் பிளான்டேசன் குழுமத்தினால் ரூபா 2,323,225 செலுத்த மறுப்பதினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மீதிகளிற்கு பெறுமதி இழப்புகள் மேற் கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டு வரப்படுகின்ற ஊவா மாகாணத்தின் விவசாய ஏற்றுமதி வலயத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 10,403,683 தொகை காணப்பட்டது.இது 10 ஆண்டுகளாக காணப்பட்ட போதிலும்,மீனப்பெறுதல் நிச்சயமற்றது மற்றும் பெறுமதி இழப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. | ஊவா பரணகம உற்பத்தி கிராம நிகழ்ச்சி செயலற்ற நிலையில் உள்ளது.மீதிகள் தொடர்பாக பழைய பேரேடுகள் பரிசோதிக்கப்படுகின்றன. | உறுதிப்படுத்த முடியாத மற்றும் மீள பெற முடியாத மீதிகளை கண்டறிந்து பெறுமதி இழப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 31 திசெம்பர் 2020 இல் உள்ள 2009 ஆம் ஆண்டில் இருந்து ஏற்றுமதியாளரிடம் இருந்து பெற வேண்டிய மீதி ரூபா 40,213,658 ஆகும்.அத்துடன் பெறுமதி இழப்புகள் முழுத் தொகைக்கு மேற் கொள்ளப்பட்ட போதிலும், மதிப்பாண்டில ரூபா 49,000 மீள பெறப்பட்டது. | கடந்த ஆண்டு நிலவிய தொற்று நோய் சூழ்நிலை காரணமாக பணம் செலுத்திய கம்பனிகள் அவர்களுக்கு பணம் செலுத்துவதில் உள்ள சிரமங்கள் குறித்து எங்களுக்கு தெரிவித்திருந்தன.அதன்படி சபையால் சிறிய தொகையை மட்டுமே மீட்க முடிந்தது.எனவே,சில கம்பனிகள் மட்டும் இன்னும் பணம் செலுத்துகின்றன.ஏனெனில் பெரும்பாலான கம்பனிகள் செயலற்ற நிலையில் உள்ளன.மற்றும் சில கம்பனியின் உரிமையாளர்கள் இறந்து விட்டனர் மற்றும் நாட்டை விட்டு வெளியேறினர்.சில கம்பனிகளுக்கான சட்ட நடவடிக்கைகளை எடுக்க மத்திய சபைக்கு அனுப்பப்பட்டது. | மீட்க முடியாத நிலுவைகளை சரியாக அடையாளம் கண்டு உடனடியாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 74,011,899 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 66,745,210 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 7,266,689 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இணைந்த கம்பனியின் முதலீட்டில் இருந்து பெற்ற ரூபா 70,784,699 இலாபம் என்பன முன்னேற்றத்துக்கான பிரதான காரணமாகும்.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வானது கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ)டீஎச்பிஎல் இணைந்த கம்பனியில் முதலிட்டதன் மூலம் கிடைக்கப்பெற்ற இலாபபங்கு 27 சதவீதத்தால் மற்றும் இடிபி இ- சந்தை வருமானம் 206 சதவீதத்தால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அதிகரித்துள்ளது.

(ஆ)அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக ஏற்றுமதியாளரின் பங்களிப்பு 49 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கற்கை நெறி கட்டணமானது 63 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

(இ)ஏற்றுமதி அபிவிருத்தி செலவானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 67 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| டிஎச்பிஎல் கட்டிடத்தில் சபையின் 41 சதவீத முலதன உரிமை, கட்டிடத்தில் 5,6,7,8 மற்றும் 9 ஆகிய 5 மாடிகள்,44,990 சதுர அடியில் தலைமை காரியலத்தை பராமரித்தல் மற்றும் ஒரு சதுர அடிக்கு ரூபா 1655 ஆக மதிப்பாண்டில் ரூபா 74,460,000 மொத்த வாடகையாக காணப்படுகின்றது.வாடகை ஒப்பந்தம் ஒவ்வொரு இரண்டு ஆண்டிற்கு புதுப்பிக்கப்படுகின்ற போதிலும்,2018 இனை விட 2019/2020 இல் வருடவாடகை ரூபா 6,960,000 அதிகரிப்புடனும் மற்றும் 2020 இனை விட 2021/2022 இல் வருடவாடகை ரூபா 8,214,000 அதிகரிப்பாக காணப்படுகிறது.வருடாந்தம் இந்த வாடகையை செலுத்துவதற்குரிய போதியளவு ஏற்பாடு சபையினால் மேற்கொள்ளப்படாமையினால்,நிதிக்கூற்றில் தொடர்ச்சியாக செலுத்தப்பட வேண்டிய வாடகையாக குறிப்பிடப்படுகின்றது மற்றும் மதிப்பாண்டில் செலுத்த வேண்டிய வாடகை ரூபா 74,459,700 ஆகும்.மேலும் இந்த கட்டிடத்தில் இயங்கும் வேறு நிறுவனங்கள் நியாயமான விலைக்கு மாடிகளை கொள்வனவு செய்துள்ளன.ஆனால் சபையானது இவ்வாறான சாதகமான மாற்று வழிமுறைக்கு வழி நடத்தப்படவில்லை.இணை கம்பனியின் இலாபபங்கு ரூபா 109,365,467 ஆக காணப்பட்ட போதிலும்,64 சதவீத இலாபம் வாடகையாக இந்த கம்பனிக்கு செலுத்தப்படுகிறது. | 1994 இல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க டிஎச்பிஎல் கம்பனியை நிறுவுதல்,இடிபி உடன் மற்றும் என்டிபி கையெழுத்திட்ட இரட்டை ஒப்பந்தம் தொடர்பான சட்ட விடயங்கள் இன்னும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. | உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 31 திசெம்பர் 2020 இல் ரூபா 105,111,477 மற்றும் ரூபா 58,312,483 தொகையானது முறையே 29 கம்பனிகளின் முன்னுரிமை பங்குகளில் மற்றும் 33 கம்பனிகளின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட கம்பனிகள் செயலற்றன மற்றும் மூடப்பட்டன.கம்பனி சட்டத்தின் பிரிவு 487 (3) பிரிவின் கீழ்,இந்த கம்பனிகள் கம்பனி பதிவேட்டில் இருந்து பெயர்கள் நீக்கப்பட்டன அத்துடன் கம்பனியின் சொத்துக்கள் கைப்பற்ற கூடிய போதிலும்,அந்த கம்பனியின் சொத்துக்களை கைப்பற்றுவதறகு குறிப்பிட்ட முறைமை இல்லாததால் கம்பனி சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என சட்டமா அதிபர் தெரிவித்தார். எனினும், கம்பனியை கண்டுபிடிக்க முடியாத காரணத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை மற்றும் சபையால் ஏற்பாடு மேற் கொள்ளப்பட்டது. | பெரும்பாலான கம்பனிகள் செயற்படாத நிலையில் உள்ளன. | செயலற்ற கம்பனிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை கண்டறிந்து உடனடியாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2000 முயற்சியாளரை ஏற்றுமதியாளராக மாற்றுவதற்குரிய நிகழ்ச்சிக்கு 2017 இல் இருந்து 2020 வரைக்கும் ரூபா 34,116,693 செலவிடப்பட்டது.இந்த நிகழ்ச்சியின் ஊடாக 209 முயற்சியாளர்கள் ஏற்றுமதியாளராக சென்றார்கள்.மற்றும் இருவர் மட்டும் 2018 காலப்பகுதியில் ஏற்றுமதியை மேற்கொண்டார்கள்.அதன்பின் ஏற்றுமதி நடைமுறைப்படுத்தப்படவில்லை. 2017-2020 வரையான 4 ஆண்டுகளில் இருவர்,31 முயற்சியாளர்கள் 3 ஆண்டுகள் மற்றும் 178 பேர் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளாக ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.மேற்கூறப்பட்டதன் படி சபையால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளிற்கு சபையால் நிகழ்ச்சி திட்டத்தின் இலக்கை அடையமுடியவில்லை. | 2000 முயற்சியாளர்களை ஏற்றுமதியாளராக்கும் நிகழ்ச்சி திட்டத்தில் 209 சிறிய நடுத்தர முயற்சியாளர்கள் ஏற்றுமதி சந்தைக்கு ஏற்றுமதியாளராக அறிமுகப்படுத்தப்பட்டனர்.மற்றும் வெற்றியீட்டினர்.முதலாவது ஏற்றுமதி கட்டளை வெற்றியளித்தாலும் பெரும்பாலான சிறிய நடுத்தர முயற்சியாளர்களிற்கு தொடர்ச்சியான கட்டளைகளை பாதுகாக்க முடியவில்லை.ஏனென்றால் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்கை நிலவரம் அவர்களை பாதித்தமையாகும்.அவர்கள் ஏற்றுமதி சந்தையில் நிலைத்து நிற்கும் வரை தொடர்ச்சியாக அவர்களுக்கு வசதிகளை வழங்குகின்றது.இந்த நிகழ்ச்சியின் கீழ் அடையாளம் காணப்பட்ட சிறிய நடுத்தர முயற்சியாளரை ஏற்றுமதியாளராக மாற்றும் செய்முறைக்கு நீண்டகாலம் எடுக்கப்படும்.ஏனென்றால் அனேகமான முயற்சியாளர்கள் | முயற்சியாளர்கள் வெளிநாட்டு சந்தை போட்டிக்காக எதிர்கொள்ளும் ஒரு நிபந்தனை வரைக்கும் ஒரு முறையான திட்டத்தின் படி சபை செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | உள்ளூர் மட்டத்தில் உள்ளனர்.மற்றும் அவர்களை ஏற்றுமதி சந்தைக்கு சமர்ப்பிப்பதற்கு அவர்களின் இயலளவை(உற்பத்தி மற்றும் மனிதவளம்) அபிவிருத்தி செய்வது அவசியமாகும். |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 258 மற்றும் உள்ளபடியான பதவியணி 211 ஆகும்.ஆகையால் 47 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், அவற்றுள் சிரேஷ்ட மட்டத்திலான 06 பதவிகளும் 16 கீழ் மட்டத்திலான பதவிகளும் 25 ஆரம்ப மட்டத்திலான பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன. இந்த வெற்றிடங்களில் மேலதிக இயக்குனர் தலைமையதிபதி (அபிவிருத்தி), இயக்குனர் (உற்பத்தி) இயக்குனர் (ஏற்றுமதி சேவைகள்) ஆகிய பதவிகள் சபையின் முக்கிய குறிக்கோளை அடைவது தொடர்பாக நேரடி தொடர்புடையவை ஆனால் இந்த வெற்றிடங்ளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இயக்குனர் தலைமையதிபதி மற்றும் தந்திரோபாய திட்ட இயக்குனர்,உள்ளூர் மேம்பாட்டு இயக்குனர்,ஏற்றுமதி சேவைகள் இயக்குனர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் விசேட அனுமதி 2020.06.20 திகதியிட்ட கடிதத்தில் எழுத்துபூர்வமாக வழங்கப்பட்டது. அந்த நேரத்தில் இருந்த மேலதிக இயக்குனர் தலைமையதிபதி (அபிவிருத்தி), மேலதிக இயக்குனர் (நிர்வாகம் மற்றும் கட்டுப்பாடு) ஏற்றுமதி சேவைகள் இயக்குனர்,தகவல் தொழில்நுட்ப இயக்குனர் மற்றும் கைத்தொழில் பொருட்கள் இயக்குனர் போன்ற உயர்நிலை பதவிகளை உடனடியாக நிரப்புவதற்கு 2020.10.22 திகதியின் படி முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் அனுமதி வழங்கப்பட்டது.ஆகையால் மேலதிக இயக்குனர் (அபிவிருத்தி) பதவி 2021.03.25 அன்று நிரப்பபட்டது.மீதமுள்ள மூன்று வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை அழைத்த பிறகு 2021.04.23 இல் நேர்முக தேர்விற்கு அழைக்கப்பட்டனர். முகாமைத்துவ உதவியாளர் பதவிகளை நிரப்புவதற்கு பெறப்பட்ட 2597 | சபையின் முக்கிய இலக்குகளை அடைய பொருத்தமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

விண்ணப்பங்களில் இருந்து 1311 தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர் போட்டி பரிட்சையை வைப்பதற்கு கொள்வனவு அலகுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.அதன் பிறகு கீழ் நிலை பதவிகளை நிரப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.2018.05.22 இல் முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் அங்கிகரிக்கப்பட்ட 11 பதவிகளை ஆட்சேர்ப்பு நடைமுறைகளை ஏற்காததால் நிரப்ப முடியவில்லை.